# திருவள்ளுவரின் காமத்துப்பால் காட்டும் ஆண், பெண் சமன்மை

இரா.வரலட்சுமி

**முன்னுரை:** திருவள்ளுவர் எல்லாவற்றிலும் சமன்மை நிலையை விரும்புபவர் என்பதை, திருக்குறள் அறத்துப்பால் முதல் காமத்துப்பால் வரை அவருடைய சமன்மைக் கொள்கையை கடைப்பிடித்துள்ளார் எனில் மிகையன்று. பொருட்பாலில் பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும் (கு.972) என்று கூறியவர். அவரவர் செயற்பாடுகளால் தான் சிறப்பு என்ற கருத்தையும் வலியுறுத்தியுள்ளார் வாழ்க்கைத் துணைநலம் என்ற அதிகாரத்தில் கணவனுக்குத் துணையாக மனைவியும், மனைவிக்குத் துணையாக கணவனும் வாழ வேண்டும் என்ற நோக்கில் எழுதப்பட்ட அதிகாரம் எனில் மிகையன்று 'துணை' என்பதற்குச் "சமத்துவ அடிப்படையிலான அணுக்கத் தோழமை" என்று பன் மொழிப்புலவர் கா. அப்பாதுரையார். பொருள் தருகிறார்.

இக்கட்டுரையில் சமன்மை என்ற சொல்லிற்கு விளக்கம். தொல்காப்பியர் காட்டும் சமன்மை, சங்க கால நூல்களில் சமன்மை, திருவள்ளுவர் காட்டும் சமன்மைநிலை, தலைவி, தலைவனின் ஒத்த அறிவ, ஒத்த மனம், ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

**1.1. சமன்மை என்ற சொல் விளக்கம்** : உலகில் பொது நலத்திற்குப் பாடுபட முன்வந்த பெரியோர்களால் சமமான சுக வாழ்வு - அமைதியுடன் கூடி வாழ்வது என்னும் மன எழுச்சியும் மக்களிடையே பரப்பப்பட்ட போது சமத்துவம் என்னும் சொல் பெரு வழக்காயிற்று. சென்னைப் பல்பலைக் கழகப் பேரகராதியில் இச் சொல் இடம் பெறாமையினால் இது மிக அண்மைக்காலத்தில் வழக்கிற்கு வந்தது என்பது தெளிவுறும். 1937 ஆம் ஆண்டு மதுரைத் தமிழ் அகராதியில் இச்சொல் இடம் பெற்றுள்ளது. இதற்கே சமநிலை, சமமான தத்துவம் என்னும் பொருள்களை இவ்வகராதி தந்துள்ளது. இதனைப் பின்பற்றிப் பின்வந்த ஆனந்த விகடன் அகராதி முதலியனவும் இச்சொல்லையும் பொருளையும் எடுத்தாண்டுள்ளன.

சமத்துவப் பொருளில் இலக்கிய வழக்காறுகள், சமத்துவம் என்னும் பொருளில் சமநிலை என்னும் சொல் வழக்காறு காலத்தால் முந்தியதே. தண்டியலங்காரத்திலும் தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கே பேராசிரியர் எழுதிய உரையிலும் இச்சொல் இடம் பெறுகிறது. சமநிலை, சமதை, சமம், நிகர், ஒப்பு முதலிய பல சொற்கள் இப்பொருள் தருவனவே. (அகப் பொருள் மரபுகள்) - சண்முகம் பிள்ளை நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

**1.2 தொல்காப்பியத்தில் சமன்மை காணல்:**

"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டுடொடு
உருவ நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வோடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே"

தொல்காப்பியர் கூற்றுப்படி தலைவனும், தலைவியும் 1. ஒத்த பிறப்பு 2. ஒத்த அன்பு 3. ஒத்த ஒழுக்கம் 4. ஒத்த ஆண்டு 5. ஒத்த அழகு, 6.ஒத்த ஆண்மை 7.ஒத்தநிறை 8. ஒத்த அருள் 9. ஒத்த அறிவு 10. ஒத்த செல்வம் ஆகிய இவற்றைத் தொல்காப்பியர் மெய்ப் பாட்டியலில் சுட்டுகிறார்.

சமன்மைப் பண்பைக் கூறிய தொல்காப்பியர் தலைவன் இப்பத்துப் பண்புகளில் மிக்கு விளங்கினாலும் விளங்கலாம், ஆனால் தலைவி மிக்கு விளங்கக் கூடாது என்னும் பொருள்படக் கூறுகிறார் பிரிதொரு நூற்பாவில்.

ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோ னாயினும் கடிவரை இன்றே. (தொல். 1036)

பெண்களுக்கு உரிய சிறந்த குணங்களாக தொல்காப்பியர் கீழ்காணும் நூற்பாவைச் சுட்டுகிறார்.

செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பாலான ( தொல்.1155)

அரசியலிலோ, பொருள் ஈட்டுவதிலோ, பெண்கள் ஈடுபட்டதாக நூற்பாக்களில் எங்கும் காணப்படவில்லை. இல்லறக் கடமைகள் ஆற்றுபவளாக அவள் படைக்கப்பட்டுள்ளாள்.

தொல்காப்பியக் கால சமுதாயத்தில் ஆண் மகனுக்கு மதிப்பும் மரியாதையும் தரப்பட்டன. ஆண்மகனை ஈன்ற தாய் பெரிதும் மதிக்கப்பட்டாள் என்று நூற்பா மூலம் அறியக்கிடக்கும் செய்தியாகும். ஆண்வழிச் சொத்துரிமை, போரில் ஈடுபடுவது, கல்வி, கற்க, பொருள் ஈட்ட வெளியூர் செல்வது, இறந்தார்க்கு ஈமக் கடன் செய்வது போன்ற வேலைகளில் ஆண்மக்கள் மட்டுமே ஈடுபட்டனர். குழந்தை தவறு செய்யும் பொழுது கூட குழந்தையைக் கடிந்துகொள்வது தந்தையைக் கூறி கூறும் மரபு இருந்துள்ளது என்பதைக் கீழ்க்காணும் தொல்காப்பிய நூற்பா சுட்டுகிறது.

தந்தையர் ஒப்பர் மகன் என்பதனால் (தொல். 1097)

மகனுக்குக் கொடுத்துள்ள முக்கியத்துவம், ஆணாதிக்கம் தொல்காப்பியர் காலத்தில் இருந்துள்ளது என்பதற்குச் சான்றாக கொள்ளலாம். மேலும், ஆடவர் கற்பு வலியுறுத்தப்படவில்லை. பலதார மனம், இல்பரத்தை, சேரிபரத்தை போன்ற சொற்கள் சுட்டப்படுவதால் பல பெண்களுடன் வாழ்ந்துள்ளான் தலைவன் என்று அறிய முடிகிறது. பெண் கல்விபற்றியோ பெண்ணிற்கு உரிமை இருந்தது என்றோ கூற முடியவில்லை. கற்பியலில் தலைவிக்கு உரிய உரிமைகளை வாயிலோர் கூற்றாக கீழ்க் காணும் நூற்பாவில் கூறுகிறார்.

“கற்புங் காமமும் நாற்பா லொழுக்கம்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஒம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்” (தொல். 1099)

சில உரிமைகளைத் தலைவிக்கு தலைவன் தந்துள்ளான் என்பதை தலைவி கூற்றாகவே தொல்காப்பியர் கூறியுள்ளார்.

“உரிமை கொடுத்த கிழவோன் பாங்கின்” தொல். 1096

தொல்காப்பியர் சமன்மை பண்புகளாக பத்தைக் குறிப்பிட்டாலும் ஆண் ஆதிக்க சமுதாயத்தின் காரணமாக பெண்களுக்கு சமன்மை தர மறுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதே, நூற்பாக்களின் வாயிலாக அறிய முடிகிறது. அரசியலில் பெண்கள் பங்கேற்று இருந்தாகத்தெரியவில்லை. ஆணிற்கே பெருமை தரப்பட்டுள்ளது என்பதை.

“பெருமையும் உரனும் ஆடுவுமேனே” (தொல். 1045)

தலைவன் தலைவியைப் பணிந்து நிற்கும் நிலையை இரண்டு இடங்களில் மட்டும் சுட்டுகிறார்.

“முன்னிய நிறையழி பொழுதின்
மெல்லென் சீறடிபுல்லிய இரவினும்
உறலருங் குரைமையின் ஊடன்மிகுத் தோளைத்” (தொல். 1092)

“பகுதியின் நீங்கிய தகுதிக் கண்ணும்
கொடுமை ஒழுக்கங் கோடல் வேண்டி
அடிமேல் வீழந்த கிழவனை நெருங்கி” (தொல். 1099)

தலைவன் நிறையழிந்து நிற்கும் நிலைமையிலும், தன்னுடைய பரத்தமை ஒழுக்கத்தைத் பொறுத்துக் கொள்ள வேண்டியும், தலைவியைத் தலைவன் பணிகின்றான்.

**1.3. சங்க இலக்கியங்களில் சமநிலை:** ஒருவனுக்கு ஒருத்தி என்ற குரல் எதிர் ஒலிக்கிறது. இரண்டாவது சங்க காலத்தில் பெண்கள் கல்வியில் சிறப்புற்று விளங்கினர். அரச குடும்ப மகளிர் முதல் பலதரப்பட்ட மகளிரும் கல்வியில் சிறப்புற்று விளங்கியமையை, சங்க இலக்கியம் வாயிலாக அறியலாம். இரு மன்னர்களுக்கு இடையே நிலவிய போர் சூழலைத் தவித்து, சந்து செய்ய தூது சென்ற ஒளவையாரை அறியாதார் இருக்க இயலாது. தன் கணவன் நியாயம் தவறினான் என்று உணர்ந்த மாத்திரத்தில் உயிர் நீத்த கோப்பெரும் பிண்டும் ஆடற் கலையில் சிறந்து விளங்கிய ஆதி மந்தி (சோழ நாட்டு இளவரசி). வெள்ளி வீதியார், வெண்ணிகுயத்தியார், காக்கை பாடினியார், குறமகள் இளவெயினி, பாரி மகளிர், என்று பெண்கள் பலதுறையில் சிறந்து விளங்கிய காலம் எனின் மிகையன்று. ஒருவனுக்கு ஒருத்தி என்று குறள் ஒலிக்கத் தொடங்கிய காலம். அரசனின் மனைவி என்று சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டள்ளதே தவிர மனைவிகள் என்று குறிப்பிட படவில்லை. ஒரு பெண்மணியார் தன் சொல் வன்மையால், சொல்லாற்றல் மிக்க ஒரு ஆடவனையே வென்றுள்ளார் என்பதை,

‘வடிநாவின்

**வல்லார்முன் சொல்வல்லேன் என்னைப் பிறர்முன்னர்**
**கல்லாமை காட்டியவள் வாழி! சான்றீர்‘**
**1“ஆன்ற அறிவின் தோன்றிய நல்லிசை**
**ஒள்நுதல் மகளிர்”**

இப்பாடல்களில் இருந்து பெண்கள் கல்வி கற்கும் உரிமைப் பெற்றிருந்தது தெளிவாகிறது.

**2 “ உயிருக்கு உயிர் அன்னர் ஆகலின்”**
**3 “ உயிர் கலந்து ஒன்றிய செயிர்தீர் கேண்மை”**
**4 “ ஓர் உயிர்ப்புள்ளின் இருதலையுள் ஒன்று**
**போர் எதிர்ந்தற்றாப் புலவல்”**

**5.“வினையே ஆடவாக்கு உயிரே வானநதல் மனைஉறை மகளிர்க்கு ஆடவர் உயிர்.**

**1.4 திருவள்ளுவர் காட்டும் சமன்மை:** அறந்தப்பாலில் வாழ்க்கைத்துணை நலம் என்ற அதிகாரத்தில் குறள் 51ல் துணை என்ற செல்லாட்சி காணப்படுகிறது.

“வளத்தக்காள் வாழக்கைத்துணை” (குறள் - 151)

இக்குறட்பாவில் பெண்ணை துணை என்று தானே கூறியுள்ளார் என்ற கேள்விக்கு விடையாக காமத்துப் பாலில் ‘பொழுது கண்டு இரங்கல்‘ என்று அதிகாரத்திலும், உறுப்பு நலன் அழிதல் என்ற அதிகாரத்திலும் இரண்டு குறள்கள் காணப்படுகின்றன.

“புன்கண்ணை வாழி மருள்மாலை எம்கேள்போல்
வன்கண்ண தோநின் துணை” (குறள் : 1222)
“பணிநீங்கி பைந்தொடி கோரும் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள்” (குறள் : 1234)

இங்கு தலைவன், தலைவியை துணை என்ற சொல்லால் சுட்டுவதால் தலைவிக்கு தலைவன் துணையாகின்றான். கணவன்-துணை என்ற பொருளில் சுட்டப்படுகின்றான் என்பதை அறிய முடிகின்றது. இதிலிருந்து நாம் பெறும் செய்தி கணவனுக்கு துணை மனைவி என்பதும், மனைவிக்கு துணை கணவன் என்பதும் உறுதியாக கூறியுள்ளார் திருவள்ளுவர் என்பதாகும்.

திருவள்ளுவர் காட்டும் தலைவன் தலைவியிடம் உயிர்காதல் உள்ளவனாக இருப்பதையும் இருவருடைய உள்ளம், உயிர், உடம்பு ஆகியவை ஒத்திசையும் தன்மையைப் ‘புணர்ச்சி மகிழ்தல்’ என்ற அதிகாரத்தில் உள்ள குறள்கள் பின்வருமாறு.

கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றுஅறியும் ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணே உள. (குறள். 1101)
ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன் (குறள்-1109)

ஐம்புலனுக்குரிய இன்பங்கள் அனைத்தம் தலைவியிடம் உள்ளதாக உணர்ந்த தலைவன், ஊடல் கொள்ளுதல், பின்னர் பிணக்கம் கொள்வது, ஒருவரை யொருவர் உணர்வது, கூடி இன்புறுவது ஆகியவை, அன்புடைய சிறந்த கணவனும், மனைவியும் பெறும் பயன்கள் என்பதை தலைவன் கூற்றாக கூறுகிறார் திருவள்ளுவர். தலைவன் மேலும் தன்னுடைய சொந்த உழைப்பால் உண்டாக்கிய தன்னுடைய சொந்த இல்லத்தில் இருந்து கிடைத்த உணவை பிறரோடு பகிர்ந்து உண்பதால் கிடைக்கும் இன்பம் போன்றது என்று தலைவன், தலைவியிடம் தான் பெற்ற இன்பத்துடன் ஒப்பிட்டுக் கூறுவதாக அமைந்துள்ளது. கீழ்காணும் நூற்பா.

“தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு”

“தனிபடா மிகுதி” என்ற அதிகாரத்தில் விரும்புவனாகவும், விரும்பப்படுவனாகவும் அமைந்த கணவன் மனைவியே காதல் இன்பம் என்று சொல்லப்படும் விதையில்லாத பழக்கத்தைப் பெற்றவர் ஆவர்: என்றும், ஒரு தலைக் காமம் துன்பமானது காதல் வேட்கையானது ஆண் - பெண் இருபாலருள் ஒருவரிடத்தில் மட்டும் உண்டானால் அது துன்பம் தருவதாக அமையும். காவடித் தண்டின் சுமைகள் போல இரண்டு பக்கங்களிலும் ஒத்திருக்குமேயானால் அக்காதலின்பம் இனிமைப் பயப்பதாக இருக்கும் என்கிறார். இதனை பின்வரும் குறள்கள் கூறுகின்றன.

“தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே

காமத்துக் காழ்இல்கனி”

ஒரு தலையான் இன்னாது காமம் காப்போல
இருதலை யானும் இனிது.”

**சமன்மை நிலை: (ஒத்தநிலை)**

தலைவன் தலைவி இருபாலரும் சமன்நிலை உடையவர்கள் என்பதை திருவள்ளுவர் காதல் சிறப்பு உரைத்தல் என்ற அதிகாரத்தில் உள்ள பத்து குறள்களில் முதல் ஐந்து குறள்கள் தலைவன் கூற்றாகவும், அடுத்த ஐந்து குறள்கள் தலைவிக் கூற்றாகவும், அமைந்துள்ளதிலிருந்து, திருவள்ளுவரின் சமன்மை பண்பு உள்ளங்கை நெல்லிக்கனியாகத் தெரிகிறது.

‘மென்மையாகப் பேசுகின்ற தலைவியினுடைய துாய்மையான பற்களில் சுரக்கும் நீர் பாலொடு தேன் கலந்தது போன்ற இனிமை உடையது ‘என்றும் (குறள் 1121)’ ‘உயிர்க்கும் உடலுக்கும் உள்ள தொடர்பு போன்றது’ என்றும் (குறள் 1112) ‘கருவிழியில் இருக்கின்ற பாவையே நீ போய் விடு, நான் விரும்புபவள் அங்கிருக்க வேண்டும்’ என்றும் (1123) ‘அவள் என்னுடன் இருக்கும் போது உடலுடன் உயிர் இருப்பது போன்று உள்ளது” என்றும் (குறள் 1124) ஒளிவீசும் கண்களை உடையவளே மறந்தால் தானே நினைப்பதற்கு என்றும் வினவுவது போன்றும் (குறள் 1125) அமைந்துள்ளன.

அடுத்த ஐந்து குறள்கள் தலைவியின் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்துகின்றன “என் அன்பர் என் கண்ணிலிருந்து வெளியே செல்வது மில்லை. கண்ணிமை இமைத்தால் வருந்துவதுமில்லை அவ்வளவு நுட்பமானவர் (குறள்1126) ‘மைதிட்டுவதற்காக கண்ணை மூடினால் எங்கே மறைந்து விடுவாரோ என்று கண்ணிற்கு மைதீட்டுவதில்லை ‘என்றும் (குறள் 1127) ‘என அன்பர் நெஞ்சுக்குள்ளே இருப்பதால் வெந்து போவாரோ என்று எண்ணிச் சூடாக உண்பதற்கு அஞ்சுவதாகவும்’ (குறள் 1128) ‘தலைவியின் துன்பங்களைக்கண்ட ஊரார் தலைவனை இரக்கம் இல்லாதவர் என்று துாற்றுவதைப் பொறுக்க மாட்டதவளாய், கண்ணுள்ளே உள்ளவர் மறைந்து போவாரோ என்று அஞ்சி கண்ணை இமைப்பத்தில்லை என்று கூறுவதாகவும் (குறள் 1129) என் உள்ளத்துள் அவர் எப்போதும் விருப்பத்தோடு வாழ்கிறார். அதை அறியாத ஊரார் அவரைப் பிரிந்திருப்பவர் அன்பில்லாதவர் என்று துாற்றுகின்றனர்” (குறள் 1130) என்று தலைவி புலம்புவதாக அமைந்துள்ளது. ஒருவர் மீது ஒருவர் கெண்டுள்ள அன்பின் சமன்மை நிலை தெளிவாக விளங்குவதைக் காணலாம்.

**ஒத்த அறிவு, ஒத்தமனம்:** குறிப்பு அறிதல் என்ற அதிகாரத்தில்

“கண்ணொடு கண் இணை நோக்கு ஒக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல” (குறள் 1100)

என்று கண்ணிற்கு திருவள்ளுவர் முக்கியத்துவம் அளித்துள்ளார். தலைவனும், தலைவியும் கண்ணிற்கு முக்கியத்துவம் கொடுத்து கூறியுள்ளமை அவர்களுடைய அறிவிலுள்ள ஒத்த நிலையானது இருவரிடையே உள்ள சமன்மைப் பண்பைக் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. எனலாம் இதனை கீழ்வரும் குறள்கள் மூலம் அறியலாம்.

“கருமணியின் பாவாய்நீ போதாய்யாம் வீழும்
திருதற்கு இல்லை இடம்”. (குறள் : 1123)

என்று தலைவனும் காதல் சிறப்பு உரைத்தல் என்ற அதிகாரத்தில் தலைவி கண்ணிற்கு அளிக்கும் சிறப்பை கீழ்காணும் உணர்த்துக்கின்றன.

“கண்ணுள்ளின் போகார் இமைப்பின் பருவரார்
நுண்ணியர்எம் காதலவர்”. (குறள் 1126)

கண் உள்ளார் காதலவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக்கு அறந்து” (குறள் 1127)

இருவரும் ஒருவரையொருவர் கண்ணுள் வைத்து பார்க்கும் அழகைத் திருவள்ளுவர் மிக நயமாக படைத்துள்ளமை வியப்பிற்கு உரியதாகும்.

“கண்ணுள்ளே வைத்துக் காப்பாற்றுவேன்” என்ற கூறும் இன்றைய வழக்கில் உள்ள ஒரு சொற்றொடர் மேற்கூறிய குறள்களை படிக்கும் பொழுது நம் கண்முன்னே வருகின்றன எனலாம்.

**பலதுறை அறிவிலும் சமன்மை:-** பலதுறைச் சார்ந்த அறிவுகளிலும் இருவரும் சமன்மை நிலையில் திகழ்வதைக் கீழ்காணும் குறள்களின் வழிக்காணலாம். ஐம்பூத

இயலில் இருவருக்கும் உள்ள ஒத்த அறிவைக் கீழ்காணும் குறள்கள் உணர்த்துகின்றன. நம் முன்னோர் ஐம்பூதங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ள. நீலம், நீர், தீ, காற்று.வான் ஆகியவைகளிலும். தலைவன், தலைவி ஆகிய இருவரிடையே உள்ள ஒத்த அறிவும், சமன்மை நிலையும் காணப்படுவதைக் கீழ்காணும் குறள்கள் நமக்கு உணர்த்துகின்றன.

**நீர் - நிலம்**

“நீரும் நிழலது இனிதே புலவியும்
வீழநர் கண்ணே இனிது.” (குறள் 1309)
“புலத்தலின் புத்தேள்நாடு உண்டா நிலத்தொடு
நீர் இயைந் தன்னார் அகத்து.” (குறள் 1323)

குறள் 1323 ஐப் பரிபெருமாள் தலைவிக் கூற்றாகவும். பரிமேலழகர் தலைவன் கூற்றாகவும் கொள்வர். (கூறுவர்)

**கடல், புனல், பற்றிய அறிவு:-** ‘படர் மெலிந்து இரங்கல்’ என்ற அதிகாரத்திலும், புணர்ச்சி விசும்பல் என்ற அதிகாரத்திலும் தலைவி கூற்றாகவும், நாணுந்துறவு உணர்த்தல் என்ற அதிகாரத்தில் தலைமகன கூற்றாகவும் அமைந்துள்ள குறள்கள் கீழ்வருமாறு.

**தலைவி கூற்று**

காமக் கடல்மன்னும் உண்டே அதுநீந்தும் (குறள் 1164)
காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன் (குறள் 1167)
உறாஅர்க்கு உறுநோய் உரைப்பாய் கடலை (குறள் 1200)
உய்த்தல் அற்ந்தும் புனல்பாய் பவரேபோல் (குறள் 1287)

**தலைவன் கூற்று:-**

“காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு
நல்லாண்மை என்னும் புணை”.(குறள் 1134)

**தீபற்றிய அறிவு**

“நீங்கின் தெறுஉம் குறுகுங்கால் தண்என்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள்” (குறள் 1104) - தலைமகன் கூற்று
“தொடின்சுடின் அல்லது காமநோய் போல” (குறள் 1159)
“அழல்போலும் மாலைக்குத் துாதாகி.” (குறள் 1228) தலைவிக் கூற்று

‘வான்’ பற்றிய அறிவிலும், இருவருக்கும் உள்ள சமன்மை நிலையை கீழ்காணும்
குறள்கள் நமக்கு உணர்த்துகின்றன. ‘தனிப்படர் மிகுதி’ என்ற அதிகாரத்தில் “வானமானது பருவகாலத்தே மழைபெய்தல் என்பது மழையை எதிர்பார்த்து வாழும் மக்களுக்கு எப்படி பயனுள்ளதாக இருக்கமுடியும்” என்று தலைவி காதலர் விரைவில் வருவார் என்று எதிர் பார்ப்புடன் இருக்கிறாள் என்பதை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

“வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கு அளி” (குறள் 1192)

தலைமகன் தன் காதலியின் முகத்தை வானத்தில் உள்ள விண்மீன்கள், நிலவு ஆகியவற்றுடன் ஒப்பிட்டு கூறுவதாக இரண்டு குறட்பாக்கள் அமைந்துள்ளன.

“மதியும் மடந்தை முகனும் அறியா
பதியில் கலங்கிய மீன்”. (குறள் 1116)
அறவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல (குறள் 1117)

**மருத்துவ நோக்கிலும் இருபாலருக்கும் உள்ள ஒத்த அறிவு:-** ‘கணவிதுப்பு அழிதல்’ என்ற அதிகாரத்தில் தலைவி, “தலைவன் தனக்கு முடியாத “உய்வில் நோயை தந்து விட்டதாக” கூறுகின்றாள். காதல் துன்பத்தை உய்வில் நோய் என்று சுட்டுகிறார் திருவள்ளுவர். இது போன்றே தலைவனும் ‘குறிப்பு அறிதல்’ புணர்ச்சி மகிழ்தல், ‘ஊடல் உவகை’ ஆகிய அதிகாரங்களில் நோய், மருந்து ஆகிய சொற்களை கையாண்டுள்ளான்.

“கண்தாம் கலுழ்வது எவன்கொலோ தண்டாநோய்”. (குறள் 1171)
“எவ்வநோய் தீர்க்கும் மருந்து” (குறள் 1241)
“உய்வில்நோய் என் கண் நிறுத்து” (குறள் 1174)
“ஒரு நோக்கு

நோய்நோக்கு ஒன்று அந்நோய் மருந்து"(குறள் 1091)
"பிணிக்கு மருந்து". (குறள் 1102)
"உணலினும் உண்டது அறல்இனிது காமம்" (குறள் 1326)

இதிலிருந்து இருவரிடையே உள்ள சமன்மைப் பண்பை உணர முடிகிறது. புராணவியல் சம்பந்தமான அறிவிலும் இருவருக்கும் உள்ள சமன்மைப் பண்பை கீழ்காணும் குறள்கள் சுட்டுகின்றன.

"தாக்கணங்கு தானைக் கொண்டன்னது உடைத்து"(குறள் 1082)
"பண்டு அறியேன் கூற்று என்பதனை இனிஅறிந்தேன்" (குறள் 1083)
"கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்" (குறள் 1085)
"இனிது கொல் தாமரைக் கண்ணான் உலகு" (குறள் 1103)

இவைத் தலைவன் கூற்றாகவும்

"கண்டது மன்னும் ஒரு நாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண்டற்று" (குறள் 1146)
"புலத்தலின் புத்தேள்நா டுண்டோ"(குறள் 1323)

தலைவி கூற்றாகவும் உள்ளது.

சமுதாயம் ஓம்புதலிலும் இருவருக்கும் உள்ள சமன்மைப் பண்பை கீழ்காணும் குறள்கள் உணர்த்துகின்ற 'புணர்ச்சி மகிழ்தல்' என்ற அதிகாரத்தில் குறள் 1107 தலைவன் கூற்றாகவும், 'கனவு நிலை உரைத்தல்' என்ற அதிகாரத்தில் குறள் 1211 தலைவிக் கூற்றாகவும் அமைந்துள்ளதைக் காணலாம்.

"தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு" (குறள் 1107)
"காதலர் தூதொடு வந்த கனவினுக்கு
யாது செய் வேன்கொல் விருந்து"(குறள் 1211)

1.5 நாணம்: நாணம் என்பது பெண்ணிற்கு மட்டும்தான் என்று கூறிவந்த காலத்தில் திருவள்ளுவர் ஆண், பெண், இருபாலருக்கும் பொதுமைப் படுத்தி கூறிய முதல் புரட்சியாளர் என்று கூறினால் மிகையன்று: 'நாண் உடமை' என்ற அதிகாரத்தில் பெண்ணிற்கு நாணம் இயல்பாக உள்ள பண்பு என்றும் "நாணுந் துறவு உணர்த்தல்" என்ற அதிகரத்தில் நாணம் தலைவனுக்குரிய பண்புகளில் ஒன்று என்பதைத் தலைவன் வாயிலாகக் கூறவைத்துள்ள நயம் பாராட்டிற்குரியதாகும். அவற்றைக் கீழ்காணும் குறள்களில் காணலாம்

"கருமத்தால் நாணுதல் நாணு திருநுதல்
நல்லார் நாணுப் பிற" (குறள் 1011)
"நாணொடு நல்லாண்மை பண்டு உடையேன்" (குறள் 1133)
"காமக் கடும்புனல உய்க்குமே நாணோடு
நல்லாண்மை என்னும் புணை" (குறள் 1134)

**1.6 கற்பு:-** கற்பையும், பொதுமைப் படுத்திய திருவள்ளுவரின் பொதுமை பண்பை பாராட்ட வார்த்தைகளே இல்லை எனலாம். அறத்துப்பாலில், "வாழ்க்கைத் துணை நலம்" என்ற அதிகாரத்தில் பெண்ணின் கற்புத் தன்மையை எடுத்துக் கூறுகிறார். அறத்துப்பாலில் பிறன் இல் விழையாமையிலும் பொருட்பாலில் வரைவின் மகளிரிலும் ஆடவர் கற்பை வலியுறுத்துகிறார். காமத்துப் பாலில் ஆணின் கற்பை, புலவி நுணுக்கம் என்ற அதிகாரத்தில் தலைவியின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ள நயம் பாராட்டிற்கு உரியதாகும்.

"பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பு என்னும்
திண்மை உண்டாகப் பெறின்". (குறள் 54)

தொல்காப்பிய காலம் முதல் சங்க இலக்கியம் காலம் வரை பெண்ணின் கற்பிற்குக் கொடுத்த முக்கியத்துவத்தை ஆடவர் கற்பிற்கு காட்டவில்லை. கற்புடைய மகளிர் சமுதாயத்தில் பெரிதும் மதிக்கப்பட்டனர்: போற்றப்பட்டனர் என்பதைச் சங்க நூல்களின் வாயிலாக அறிய முடிகிறது.

அடங்கிய கற்பின் ஆய்நுதல் மடந்தை (புறம : 249. 10)
ஆன்ற கற்பின் சான்ற பெரியள் (அகம் : 314)
மாசில் கற்பில் மடவோள் (நற். 15.7)

மேலும் கற்பை ‘அறம் சால் கற்பு’ என்றும் (பதிற்று 31.24) வணங்குறுகற்பு (அகம் 71.5) முல்லை சான்ற கற்பின் மெல்லியல் (சிறு. 30) என்றும் கற்புடைய மகளிர் பாராட்டப்பட்டுள்ளனா. திருவள்ளுவர் பெண்கள் கற்பை.

“கற்புஎன்னும் திண்மை உண்டாகப் பெறின்”

என்று கற்பின் திண்மையை மனக் கட்டுப்பாடு என்ற குறிப்பிடுகின்றார்.

“தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதுஎழுவாள்
பெய்எனப் பெய்யும் மழை” (குறள் 55)

கற்புடைய பெண்டீர் மழையையும் வரவழைக்கும் தன்மை உடையவர்கள் என்று குறிப்பிடுகின்றார். இக்கருத்தினைக் கலித்தொகை பாடல்வரியும் சுட்டுகிறது. “வான்தரு கற்பினள்” (கலி. 147.66)

திருவள்ளுவர் ஆடவர் கற்பை வலியுறுத்தி மற்றவன் மனைவியை விரும்பாதே என்கிறார் பிறன் இல் விழையாமை என்ற அதிகாரத்தில்.

பிறன் பொருளாள் (குறள் 141) பிறன் கடை (குறள் 142) தெளிந்தார் இல்தீமை புரிந்து ஒழுகுவார் (குறள் 143) பிறன் இல் புகுவார் (குறள் 144) பிறன் இயலாள் பெண்மை நயப்பவர் (குறள் 147) பிறன்மனை நோக்குபவர் (குறள் 148) பிறர்க்குரியன் தோள் தோய்பவர் (குறள் 149) பிறன்வரையாள் பெண்மை நயப்பவர் (குறள் 150)

பிறன்மனை நயக்கும் செயல் சமுதாய கட்டமைப்பைச் சீர்குலைத்து ஒழுக்கக் கேட்டை உருவாக்கிவிடும்.

வரைவின் மகளிர் அதிகாரத்தில் (பொருட்பாலில்) பொருளை இழந்து நிற்கும் ஆடவரையும் பணத்தை எதிர்பார்த்து உறவு கொள்ளும் பெண்களையும் சாடுகின்றார்.

அருட் பொருள் ஆயும் அறிவினர் (குறள் 914). நிறை நெஞ்சம் இல்லவர் (குறள் 917). ஆயும் அறிவினர் அல்லர் (குறள் 918), புரையிலாப் பூரியர் (குறள் 919), திருநீக்கப்பட்டார் (குறள் 920) என்று பரத்தையோடு தொடர்பு கொள்ளும் ஆடவர்களை சாடுகிறாள்.

காமத்துப்பாலில் புலவி நுணுக்கம் என்ற அதிகாரத்தில் திருமணம் ஆகாத ஒரு பெண்ணைத் தன் கணவன் உள்ளத்தால் கூட நினைக்கக் கூடாது என எண்ணி பொய்யான ஒரு ஊடலை உருவாக்கி தலைவி தலைவனிடம் ஊடல் கொள்வதையும் தலைவி வாயிலாக சுட்டுகிறாள். தலைவன் கற்பு இழந்தவன் என்பதையும்.

“பெண் இயலார் எல்லோரும் கண்ணின் பொதுஉண்பர்
நண்ணேன் பரந்த நின் மார்பு” (குறள் 1311)

ஆடவர்க்கும் கற்பு வேண்டும் என்று கூறிய திருவள்ளுவர் ஒரு சமுதாய புரட்சியாளர் எனில் மிகையன்று. ஆண் ஆதிக்க சமுதாயத்தைத் தகர்க்க வித்திட்டவர் எனலாம்.

**1.7 இருபதாம் நூற்றாண்டு கவிஞர்களின் பார்வையில் சமன்மை நிலை** :இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் திருவள்ளுரின் கருத்துக்களுக்கு, பிரதிபிம்பமாக (பிரதிபலிப்பாக) இருபதாம் நூற்றாண்டு கவிஞர்களின் கருத்துக்கள் அமைந்துள்ளது எனலாம். அக்கருத்துக்களை பராதியார் வாயிலாகவும், பாரதிதாசன் கவிமாமணி ஆகியோரின் பாடல்கள் வாயிலாகவும் காண்போம்.

“கற்பு நிலையென்று சொல்ல வந்தார் இரு
கட்சிக்கும் அ∴து பொதுவில் வைப்போம்”
“ஆண்களோடு பெண்களும்
சரிநி கர்ச மான மாக
வாழ்வம் இந்த நாட்டிலே” (பாரதியார்)

என்ற பாடல்கள் நமக்கு உணர்த்துகின்றன

இதற்கும் ஒரு படி மேலே சென்று “அச்சமும் நாணமும் நாய்களுக்கே வேண்டும்.“என்கிறார் பாரதிதாசன் ஆணிற்கு மட்டும் கல்வியில்லை, பெண்ணிற்கும் கல்வி அவசியம் அப்பொழுதுதான் உலகம் உய்யும் என்கிறார்.

“பெண்கட்கு கல்வி வேண்டும்
குடித்தனம் பேணுதற்கே
பெண்கட்கு கல்வி வேண்டும
மக்களை பேணுதற்கே
பெண்கட்கு கல்வி வேண்டும்
உலகினைப் பேணுதற்கே” (பாரதிதாசன்)

குடும்ப வாழ்வில் ஒருவா்க்கு ஒருவா் துணையாக, ஒப்பாக உதவியாக இருக்கும் நிலை உண்டாயின ஆடவா், பெண்டீா், அடங்கல், அடக்கல், உயா்வு, தாழ்வு, ஆண்டான், அடிமை, என்பன உண்டோ என்பதே திருவள்ளுவரின் வினாவாகும்? தலைவன் பணிகின்றான் தலைவியை; தலைவி பணிகின்றாள் தலைவனை. கற்பைக் பொதுவில் வைத்த திருவள்ளுவா், பணிவையும் பொதுவில் வைக்கிறாா். இது வள்ளுவா் கண்ட சமுதாயப் புரட்சியாகும்.

**தொகுப்புரை:-**

திருவள்ளுவரின் காமத்துப்பாலில் காட்டும் ஆண், பெண் சமன்மை நிலை என்ற ஆய்வில் 1. சமன்மை என்ற சொல்லின் விளக்கம், 2. தொல்காப்பியத்தில் காணப்படும் சமன்மை, 3. சங்க காலத்தில் காணப்பட்ட சமன்மை நிலை 4. திருவள்ளுவா் காமத்துப்பாலில் சுட்டிக்காட்டிய சமன்மை நிலை, இருபாலருக்கும் பொதுமையாக்கப்பட்ட 5. நாணம், 6.கற்பு இவற்றின் விளக்கம் 7. 20 ஆம் நூற்றாண்டு கவிஞா்களின் சமன்மைக் குறிப்புடன் ஆய்வு நிறைவு பெறுகிறது.

**அடிக்குறிப்புகள்**

| பக்கம் | எண் | நூல் |
|---|---|---|
| 2 | 1 | தொல் 1215 மெய்ப்பாட்டியல் |
| 4 | 2 | குறுந் 218 |
| 4 | 3. | ஐங்கு 419 |
| 4 | 4. | கலி 89 |
| 4 | 5. | குறுந் 135 |
| 9 | 6. | பெண் விடுதலை விரும்பி என்ற பாடலில் பக்கம் 18, பல்சுவைப்பாடல்கள் |
| 9 | 7. | விடுதலை என்ற பாடலில் பக்கம் 50 |

**துணை நூற்பட்டியல்**


1. இளம் பூரணா் உரை - தொல்காப்பியம் கழக வெளியீடு, சென்னை ஐந்தாம் பதிப்பு 1974
2. இரா சாரங்கபாணி - திருக்குறள் உரைவேற்றுமை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் முதற்பதிப்பு 1992.
3. இரா.நெடுஞ்செழியன் - திருக்குறள் தெளிவுரை ஜெயமாலிகா அச்சகம் 1992
4. கு. மோகனராசு - திருக்குறள் மக்கள் உரை உலகத் திருக்குறள் மையம் முதல் பதிப்பு 15.01.1994.
5. மு. வரதராசன் - குறள் காட்டும் காதலா்கள் பாாி நிலையம் நான்காம் பதிப்பு 1994.
6. பதிப்பு ஆசிரியக் குழுவினால் பல பிரதிகளை ஒப்பு நோக்கி பரிசோதித்து வெளியிடப் பெற்றது. - குறுந்தொகை வெளியீடுகள் நியுசெஞ்சுாி புக் ஹவுஸ் இரண்டாம் பதிப்பு - 1981
7. பதிப்பு ஆசிரியக் குழு - கலித்தொகை் நியுசெஞ்சுாி புக் ஹவுஸ பிரைவேட் லிம்டெட்
8. பதிப்பு ஆசிரியக் குழு - ஐங்குறு நூறு, நியு செஞ்சுாி புக் ஹவ்ஸ் பிரைவேட் லிம்டெட்
9. புலவா் கா. கோவிந்தன் - குறுந்தொகைக் கோவை நாதன் பதிப்பகம், சென்னை புதிய பதிப்பு ஜனவாி 1975
10. முனைவா் சரளா இராசகோபாலன்- வள்ளுவரின் காமத்துப்பால் ஒளிப்பதிப்பகம், சென்னை முதற்பதிப்பு 1999
11. மு. சண்முகம் பிள்ளை - அகப் பொருள் மரபும் திருக்குறளும்,

சென்னைப் பல்கலைக் கழகம்
முதல் பதிப்பு 1980

12. அ. மாணிக்கனார் - அகநானூறு, வர்த்தமான பதிப்பகம், தி.நகர்
சென்னை முதற்பதிப்பு